பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 15 சனிக்கிழமை 29.06.2024 கதிர் 234

# போரில் மட்டுமல்ல அரசியலிலும் வரலாற்று வெற்றியைப் பெறுவார்

## 'பீல்ட் மார்ஷல்' பொன்சேகா குறித்து ரணில் பெருமிதம்



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவின் சேவை இராணுவத் தளபதியாகவோ, நாடாளுமன்ற உறுப்பின ராகவோ முடிந்துவிடப் போவதில்லை. அவர் நாட்டுக்கு சேவையாற்றுவதற்கு இன்னும் வாய்ப்புக்கள் உள்ளன. போர்க் களத்தில் மாத்திரமின்றி அரசியல் களத்திலும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையில் திடீரென 137 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கடலில் எல்லை தாண்டி வருவதன் காரணமாகக் கைது செய்யப்படும் மீனவர்கள் இதில் உள்ளடங்கவில்லை. கடவுச்சீட்டு, விஸா என்பவற்றோடு நாட்டுக்குள் நுழைந்த இந்தியர்களே கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

பெரியளவில் இணையத்தள மோசடியில் இவர்கள் ஈடுபட்டார்கள் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குற்றஞ்சாட்டுகின்றது.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை, மாதிவெல (சிறீ ஜயவர்தனபுர கோட்டே), மற்றும் தலங்கம (பத்தரமுல்ல) ஆகிய இடங்களில் பதுங்கியிருந்து மோசடியில் ஈடுபட்ட இந்தியர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நீர்கொழும்பில் 55 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதோடு 55 கையடக்கத் தொலைபேசிகளும் 29 கணனிகளும் கைப்பற் ☞ 2

## ஹிருணிகாவுக்கு 3 ஆண்டுகள் சிறை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இளைஞர் ஒருவரைக் கடத்தித் தாக்கிய வழக்கில் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்த நீதிமன்றம் அவரைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டது. ஹிருணிகா நீதிமன்றத்தில் இருந்து நேரடியாக சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

2015ஆம் ஆண்டு கொழும்பு - தெமட்டகொடை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பணியாற்றிய அமில பிரியங்கர அமரசிங்க என்ற இளைஞர் ஒருவரைக் கறுப்பு நிறத்திலான டிபெண்டர் ரக வாக னத்தில் கடத்திச் சென்று ☞ 2

## புதிய மின்சாரச் சட்டம் வியாழன் முதல் நடைமுறைக்கு

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட புதிய மின்சாரச் சட்டம் வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் 44 வாக்குகள் பெரும்பான்மையுடன் ஜூன் 6 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. விவாதத்தின் முடிவில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் கிடைத்தன.

இந்தச் சட்டமூலத்தில் உச்ச நீதிமன்றம் அரசமைப்பை ☞ 2

## பொன்சேகாவின் நூல் வெளியீடு



இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியும் இறுதிப் போருக்கும் தலைமை தாங்கியவருமான 'பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேகாவின் 'இராணுவ தளபதி தேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி - இந்தப் போர் அடுத்த தளபதி வரையில் நீடிக்க இடமளியேன்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி ☞ 2

## கெஹலியவின் மறியல் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட 7 பேரை எதிர்வரும் ஜூலை 12 வரை மீண்டும் விளக்கமறியலை நீடித்து மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனிதப் பாவனைக்கு உதவாத இமோகுளோபின் மருந்துகளைக் கொள்வனவு செய்த மோசடி வழக்கில் சந்தேகநபர்கள் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அப்போதே அவர்களின் மறியல் உத்தரவை நீதிமன்றம் நீடித்தது.

## இலங்கைக்கு வருகிறார் அமெ. திறைசேரி அதிகாரி

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளார். அவரது வருகை குறித்து அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

தனது இலங்கைப் பயணத்தில் ரொபர்ட் கப்ரோத், அரச அதிகாரிகள், நிதித்துறை சார்ந்த அதிகாரிகளை சந்தித்து கலந்துரையா ☞ 2

## வங்குரோத்திலிருந்து மீண்டதையும் இலங்கைதான் அறிவிக்கவேண்டும்

### எதிர்க் கட்சிகளுக்கு அயலுறவுத்துறை அமைச்சர் பதில்



இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டதா இல்லையா என்பதை சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனங்கள் அறிவிக்கமாட்டா, பதிலாக, கடனைத் திருப்பிச் செலுத்தும் இலங்கையின் திறன் ☞ 8

## ரணிலால் மட்டுமே நாட்டினை முன்னேற்றுவதற்கு முடியுமாம்

நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மட்டுமே உள்ளது. எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கான ஜனாதிபதியின் வேலைத் திட்டத்திற்கு ஒட்டுமொத்த மகா சங்கத்தினதும் ஆசி கிட்டும் என கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபையின் தலைவரும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தருமான கலாநிதி அக்கமஹா பண்டித வண. இத்தேபானே தம்மாலங்கார மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று ☞ 8

## "சீனாவின் பழைய நண்பன்"

மஹிந்த ராஜபக்ச என்பவர் சீனாவின் பழைய நண்பர் என சீன பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்நாட்டு பிரதி அயலுறவுத்துறை ☞ 2

## இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு. ஸ்டாலின் கடிதம் ☞ 2

## பொய் சொல்லி நாட்டை ஆளுவோரை ஆட்சியில் தொடர அனுமதிக்கலாமா?

### மக்களே தீர்மானியுங்கள் என்கிறார் எதிர்க் கட்சித் தலைவர்

நாட்டுக்கு பொய் சொல்லி, நாட்டை ஆள்பவர்கள் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை குடிமக்களே தீர்மானிக்க வேண்டும். வங்குரோத்தான நாட்டில் உண்மையைப் பேச வேண்டும். உண்மை நிலை தெரிய வேண்டும். தந்திரமான அரசியல் முடிச்சுக்களைக் கையாண்டு தமது இருக்கையை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

றப்பட்டுள்ளன. இதேபோல், கொச்சிக்கடையில், அதிகாரிகள் 53 பேரைக் கைது செய்து, 31 கணினிகள் மற்றும் 58 மொபைல் போன்களை பறிமுதல் செய்தனர்.

மாதிவெலவில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையில் 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு 8 மடிக் கணினிகள் மற்றும் 38 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. தலங்கமவில் 8 மடிக்கணினிகள் மற்றும் 38 கையடக்க தொலைபேசிகளுடன் 16 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் ஆண்கள் என பேச்சாளர் தெரிவித்தார். மோசடிக்காகவேதான் இவர்கள் இந்தியாவிலிருந்து புறப்பட்டு இலங்கைக்கு வந்துள்ளார்கள் என்று சிஐடி சந்தேகப்படுகின்றது.

.............................

நாடு வங்குரோத்திலிருந்து மீண்டுவிட்டது என்பதை யார் அறிவிப்பது என்பதுதான் இப்போது தெற்கில் உள்ள பிரச்சினை. கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு வங்குரோத்து அடைந்துவிட்டோம் என்று அறிவித்தவர்கள்நாம்தான்என்பதால் அதிலிருந்துமீண்டுவிட்டோம்என்று அறிவிக்க வேண்டியவர்களும் நாம்தான். அதென்ன! அந்த அறிவிப்பை மட்டும் சர்வதேசநிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள்தான் விடுக்கவேண்டும் என்று கேட்பது என்கின்றனர் அரச தரப்பினர்.

இப்படிப் பொய் சொல்லி ஏமாற்றவேண்டாம். சர்வதேசநிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள்தான் ஆய்வுகள், மதிப்பீடுகளுக்குப் பிறகு இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டதா என்று அறிவிக்க முடியும். அதைவிடுத்து ஜனாதிபதியோ மற்றவர்களோ அப்படி அறிவிக்க முடியாது என்கின்றனர் எதிர்க் கட்சியினர்.

இவர்களின் இந்தப் போட்டிக்கு மத்தியில் நாடு உண்மையில் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டதனால் ஏற்படக்கூடிய ஆகக் குறைந்த அறிகுறியைக்கூட காணமுடியவில்லை என்று மதிப்பீட்டாளர்கள் கூறுகின்றனர். அதற்கு உதாரணமாக அவர்கள் பங்குச் சந்தையைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

ரணிலின் ''நற்செய்தி''யான கடன்மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக நிறைவு என்பதன் ஊடாக பங்குச்சந்தையில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை என்று அவர்கள் விளக்குகின்றனர். வழக்கமாகநாட்டின்தலைவர்களால் நற்செய்திகள்அறிவிக்கப்படும்போது அது பங்குச்சந்தையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். பங்குகளின் விலைகள் உயர்வடையும் வர்த்தகம் விரிவாகும். ஆனால் இந்தத் தடவை அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஜனாதிபதி புதன்கிழமை இரவு உரையாற்றியதைத் தொடர்ந்து கொழும்பு பங்குச்சந்தை வியாழக் கிழமை திறக்கப்பட்டபோது சிலாகிக்கக்கூடியவிற்கு அதில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் பங்குச் சந்தை அன்றைய தினம் சிறிய இறங்குமுகத்தையே சந்தித்திருந்தது.

இருதரப்பு கடன் வழங்குநர்கள் வைத்திருக்கும் ×10 பில்லியன் கடனை மறுசீரமைக்கும் ஆளும் தரப்பின் ஒப்பந்தம் தொடர்பில் முதலீட்டாளர்களுக்கு உற்சாகம் ஏற்படாததே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இது ஆளும் தரப்பு பொருளாதார ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளது.

ஆகமொத்தத்தில் ஜனாதிபதி எதிர்பார்த்தைப் போன்ற அரசியல் மற்றும்பொருளாதார சாதக நிலைமை எதுவும் இந்தக் கடன்மறுசீரமைப்பு மூலம் ஏற்படவில்லை என்பது கண்கூடு. இனிஜனாதிபதித்தேர்தலை நோக்கிய தனது பயணத்தில் வேறு எதைமுன்னிலைப்படுத்தலாம்என்று அவர் தீவிரமாகச் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்று வெற்றியை அவர் பதிவு செய்வார்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 'பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேக்காவின் 'இராணுவத் தளபதி நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதி' நூல் வெளியீட்டு விழா நேற்று கொழும்பு, தாமரைத் தடாகத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வில்சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போர்க்காலத்தில்ஜெனரல்சிசில் வைத்தியரத்ன ஊடாகவே இவரை நான்அறிந்துகொண்டேன். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன என்னோடு நெருக்கமாகப் பழகியவர். இந்த அதிகாரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது, அதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுங்கள் என்று சிசில் வைத்தியரத்ன கூறினார். போர் ஆரம்பித்த காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் ஆளும்தரப்பிலிருந்த நான் போரில் பங்கெடுத்திருந்த பெரும்பாலான அதிகாரிகளை அறிவேன். அப்போது பல்வேறு சிறந்த அதிகாரிகள் உருவானதோடு அவர்களின் வரிசையில் சரத் பொன்சேகாவுக்கு சிறந்த இடம் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஜயசிக்குரு போராட்டம் தோல்வியை தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் நான் பிரதமராக பதவி வகித்ததோடு, யாழ்ப்பாணத்தை யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது. அப்போதுபலர்இறந்து போயிருந்தனர். காயங்களுக்கும் உள்ளாகியிருந்தனர். இதனால் படையினர் எண்ணிக்கை குறைந்திருந்தது.

யாழ்ப்பாணத்துக்கான படைப்பிரிவொன்று அவசியமென சிலர் கூறினர். அப்போது நான் சரத் பொன்சேகாவிடம்யாழ்ப்பாணத்தை ஒப்படைப்போம் என இராணுவ தளபதியிடம்கூறினேன். அதன்படியே செயற்பாடுகள்முன்னெடுக்கப்பட்டன. காரணம் பொன்சேக்கா என்ற ஒரு நபர் ஒருபடையணிக்குசமமானவர் என்பதே.

அவர் வீழ்ந்த இடத்திலிருந்து எழுந்து போர் வெற்றியை நோக்கி நகர்ந்தார். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. போர் என்பது கிரிக்கெட் போட்டியைப் போன்றதல்ல. உயிரிழப்புக்கள் ஏற்படும். சொத்துக்கள் இழக்கப்படும். அதற்கு மத்தியிலும் போரை வழிநடத்திச் செல்லும் வல்லமை அவரிடம் இருந்தது.

உலகத்தில் மிக் மோசமான போர் ஒன்றுக்கே நாம் முகம் கொடுத்தோம். மற்றைய நாடுகளில் இன்றும் அவ்வாறான போர்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ்தான் போர் இலங்கைக்கு முன்னதாக ஆரம்பமானது. அந்த வகையில் சரத் பொன்சேகா தனது பொறுப்பை சரிவரச் செய்திருக்கிறார்.

அதேபோல் சிவில் வாழ்க்கையிலும் அவர் பல சவால்களைஎதிர்கொண்டிருக்கிறார். அவர் தனிமைப்பட்ட வேளைகளிலும், சிறையிடப்பட்ட வேளையிலும்வலுவான மனிதராக உருவாகினார். அதனால்நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடுகலந்துரையாடிசரத் பொன்சேகாவிற்கு 'பீல்ட் மார்ஷல்' அந்தஸ்த்துவழங்கப்பட்டது. அதற்குத் தகுதியானவர் என்ற வகையில் அவரும் ஏற்றுக்கொண்டார்.

பீல்ட் மார்ஷல் பொன்சேக்கா வழங்கிய வாக்குறுதிக்கமைய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றதும் 3 தசாப்தகாலப் போரை நிறைவு செய்தார். அதன் காரணமாகவே அவர் 'பீல்ட் மார்ஷ'லாக தரமுயர்த்தப்பட்டார். இலங்கையில் 'பீல்ட் மார்ஷ'லாக செயற்பட்ட ஒரேயொரு இராணுவத் தளபதி அவர் மாத்திரமே.

ஆளும் தரப்பு என்ற வகையில் சரத் பொன்சேகாவின் தெரிவை கொண்டு நாம் பயனடைந்தோம். அவர் போராட்டகுணம்கொண்டவர். போர்க் களத்திலும் அரசியல் களத்திலும் போராட்டத்தைக் கைவிடவில்லை. அவரால்நாட்டுக்கு இனியும் சேவையாற்ற முடியும். அவரின் சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். வயதான படையினர் இறந்துபோவதில்லை, அவர்கள் மங்கி மறைந்துபோவார்கள், அந்தவகையில் பொன்சேகா மங்கி மறைந்துகூடப் போகமாட்டார், அதனால்தான் அவர் இங்கிருக்கிறார் (நுயி- விலியி-ஷ்ளஷ்வி ஜளஸ-ளஷ -ஷ்ள மிஜுளதீ கூழ்ழி-ள ழிழழிதீ. ஞூஜ மிஜுஷ்வி ஷ்ஜ-விமிழிஜஉளஜுளழலிஜமிகூழ்ழி-ள ழிழழிதீ ளஷ்மிஜுளஷ, விலி ஜுள ஷ்வி விமிஷ்யியி மிஜுளஷ்ள) என்ற வகையில் எதிர்காலத்தில் அவரிடத்திலிருந்து பெறக்கூடிய சேவையை பெற்றுக்கொள்ள நாட்டுக்கு சந்தர்ப்பம் கிட்டுமென நான் நம்புகிறேன்.

தற்போது நாட்டில் போர் முடிந்துவிட்டது. சமாதானத்துக்கான பணிகளை செய்வோம் என்று சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் வைத்துஒருமுறைகூறினார். அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்றிச்செல்வோம் என்று கேட்டுக்கொள்கிறேன். எமது இராணுவம் அனுபவங்கள் நிறைந்தது. நாட்டைக் கட்டியெழுப்பி சமாதானத்தைஏற்படுத்தஇவர்களால் முடியும் - என்றும் தெரிவித்தார்.

போர்க் களத்தைப் போன்று அரசியலிலும் பல்வேறு போராட்டங்களை எதிர்கொண்டுள்ளார். சவால்களையும் சந்தித்துள்ளார். அவற்றில்வெற்றியும்பெற்றுள்ளார். அதேபோன்றுஎதிர்காலத்திலும்அவர் நிச்சயம்வெற்றியைப்பதிவுசெய்வார். அவரது சேவை இராணுவத் தளபதியாவோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ மட்டும் நின்றுவிடப் போவதில்லை. அவர் நாட்டுக்கு சேவை செய்வதற்காக இன்னும் வாய்ப்புக்கள் உள்ளன என்றுநான்நம்புகின்றேன்என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறும் சில ஷரத்துக்களை அடையாளம் கண்டதை அடுத்து அவற்றைத் திருத்திய பின்னரே அதனைச்சட்டமாக்க முடியும்என்று அறிவித்திருந்தது. இல்லையேல் சட்டமூலத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைஎன்றும்அறிவித்திருந்தனர். இதையடுத்த சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## பொய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணப்பாட்டில் இருக்காது, இந்தப்பயணத்தின் ஒரே நோக்கம் 220 இலட்சம் மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக மாற்றுவதாக இருக்கவேண்டும் ஷ - என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின்கீழ், 266ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், களுத்துறை, ஹொரண, மொரகஹஹேன மகா வித்தியாலத்திற்குவழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டதாக நாட்டினை ஆள்பவர் தவறான கற்பிதங்களை தெரிவித்து வருகின்றார். நாட்டை ஆள்பவருக்குக்கூட இது குறித்த சரியான புரிதலும், நிபந்தனைகள் குறித்த தகவல்களும் தெரியவில்லை. நாட்டை ஆள்பவர்களால் அல்லது மக்களால் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டோம் என தீர்மானித்து அறிவிப்புக்களை விடுக்க முடியாது. சர்வதேச நிதி மதிப்பீட்டகங்கள், அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன நிறுவனங்களே உரிய மதிப்பீடுகளின் பிரகாரம் அந்த அறிவிப்பை விடுக்கும்.

இந்நிறுவனங்கள் அறிவியல், இலக்க மற்றும் தரவுகளை மையமாகவைத்து, நிதித்துறையின் பொருளாதார பின்னணி எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதன் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களை ஒப்பிட்டாய்ந்து, வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்து விட்டதா? இல்லையா? என்பதை முடிவு செய்யும்.

பிரஜைகள்- பங்கேற்பு ஆட்சிமுறையுகத்தின்தேவைப்பாடாக இன்று எழுந்துள்ளது. நீண்டகாலம் தொட்டு அண்மைக் காலம் வரை, இந்நாட்டின் ஆட்சியாளர்கள் தேசிய நிகழ்ச்சி நிரல்களை தமது தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே தயாரித்து வந்தனர். ஆனால் தேசிய நிகழ்ச்சி நிரல் பிரஜைகளின் பங்கேற்புடன் வகுக்கப்பட வேண்டும்.

அடிமட்டத்திலிருந்து வரும் குடிமக்களின் தகவல்களின் அடிப்படையில் நாட்டின் தேசிய கொள்கை வகுப்பாக்கல் செயல்முறையும், தேசிய நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட வேண்டும். பொது மக்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றார்.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுதியிருந்தார்.

அந்த கடிதங்களுக்கு நேற்று பதில் கடிதம் அனுப்பி வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம்ஜெய்சங்கர்இதனை தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதில் இந்திய மத்திய அரசு அதிக முன்னுரிமை கொடுத்திருப்பதாக கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீனவர்களின்வாழ்வாதாரத்தை பாதுகாக்க 10 ஆண்டுகளாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், மீனவர்களை விடுவிக்க கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 1974 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்விளைவாகவேமீனவர் பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டதாக கலாநிதிசுப்பிரமணியம் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த 214 இந்திய மீனவர்கள் 28 படகுகளுடன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹிருணிகாவுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரவதைக்கு உள்ளாக்கிய வடக்குஹிருணிக்காவுக்கும்அவரது முன்னாள் பாதுகாவலர்களுக்கும் எதிராக நடந்து வந்தது. இது தொடர்பான தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமால் ரணராஜாவால் நேற்று அறிவிக்கப்பட்டது.

ஹிருணிகா மீதான 18 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்றுநீதிமன்றம்அறிவித்தது. அவர் உட்பட 9 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

தங்களுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாவலர்கள் ஒப்புக்கொண்டிருந்தனர். முதல் கட்டத்திலேயே அவ்வாறு குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவர்களுக்கு 12 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்டசிறைத்தண்டனை வழங்கிய நீதிமன்றம், 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் பணித்துள்ளார்.

இந்த வழக்கில் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இருந்து சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் அவரது கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அவர் சிறைச்சாலை அதிகாரிகளால்சிறைக்குஅழைத்துச் செல்லப்பட்டார். இந்தத் தீர்ப்புக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை மேன்முறையீடுசெய்யப்படும்என்று ஹிருணிகாவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

## பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதல் பிரதி சரத் பொன்சேகாவினால் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டது. அதனையடுத்து பொன்சேகா ஜனாதிபதிக்கு நினைவு பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய சரத் பொன்சேகா தெரிவித்ததாவது:

படையினரின் அர்ப்பணிப்பின் பலனாகவே போரை வெற்றி கொள்ள முடிந்தது. ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான படையினர் உயிர்த்தியாகம்செய்தனர். பெருமளவானவர்கள்அங்கவீனமடைந்தனர். அதற்கானகௌரவத்தைஅனைத்து இராணுவத்தினரது குடும்பங்களுக்கும் தெரிவிக்கிறேன். நமது பிள்ளைகளின்எதிர்காலத்துக்காகவே அவர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். அதேபோல் நாட்டில் சமாதானத்தையும் ஏற்படுத்தினர்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவார் என்றும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

றொபர்ட் கப்ரோத்தின் வருகை, இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான நட்புறவையும் ஆதரவையும்எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பொருளாதாரம், நிதித் துறைகளில்வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் ஆழமான சீர்திருத்தங்கள் இன்றியமையாததாகும் எனவும் தூதுவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

## சீனாவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சன் வெய்டொங் ஐ சந்தித்தார்.

தலைநகர் பீஜிங்கில் இந்தச் சந்திப்பு நேற்று நடைபெற்றது. 2014 ஆம் ஆண்டு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் இலங்கைக்கான உத்தியோகபூர்வவிஜயம்தொடர்பில் இதன்போதுநினைவுகூரப்பட்டுள்ளது.

சீன ஆளும் தரப்பின் அழைப்பிற்கிணங்க முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோர் சீனாவுக்கு சென்றுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அரச ஓய்வூதியர்களின் சம்பளமும் மீளாய்வு செய்யப்படவேண்டும்;

## அவர்களது உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்க உப தலைவர் முக்தார் கருத்து



(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரச ஊழியர்களது சம்பளங்களை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள உதய செனவிரட்ண குழுவானது ஓய்வூதியர்களின் சம்பளங்களையும் மீளாய்வு செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

இல்லையேல் இதற்கென பிரத்தியேகமான மீளாய்வுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உப தலைவரும் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல். முஹம்மட் முக்தார் மகஜர் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்; -

2016-2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை நிறுத்தி வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை 35ஃ2019 (1) இல் ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறப்பட்டது.

அதன் பின் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக சுமார் 500 மில்லியன் ரூபா அப்போது நிதி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஸவால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 04 வருடங்களாகியும் எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறாயின் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது.

பொதுவாக சேவையில் உள்ள அரச ஊழியர்களது சம்பளங்கள் மீளாய்வு செய்யப்படும்போது ஓய்வூதியம் பெறுவோரது ஓய்வூதியமும்

மீளாய்வு செய்யப்படுவதும் இதன்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களது அதிகரிப்பில் 70 சதவீத அதிகரிப்பு ஓய்வூதியர்களுக்கு வழங்குவதும் ஒரு வழமையான நிர்வாக நடைமுறையாகும்.

ஆனால் தற்போது அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகின்ற போது ஓய்வூதியர்களுக்கு 7000 ரூபா வழங்குவதற்குப் பதிலாக வெறும் 2500 ரூபாவே வழங்கப்படுகிறது. அதுவும் ஏப்ரல் மாதம் முதலே வழங்கப்படுகிறது. ஆனால் அரச ஊழியர்களுக்கு ஜனவரி முதல் வழங்கப்படுகிறது. இவ்வாறு பல அநீதிகள் ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்றன.

ஆகையால் நாடாளாவிய ரீதியில் உள்ள சுமார் 6 லட்சத்து 80 ஆயிரம் அரச ஓய்வூதியதாரர்களது சம்பள முரண்பாடுகளையும் குறிப்பாக 2016ஃ2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் அரச ஊழியர்களது சம்பள முரண்பாடுகளையும் ஆராயும் வகையில் உதய செனவிரட்ண குழுவிற்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டும். அல்லது இதற்கென தனியானதொரு குழு நியமிக்கப்பட வேண்டுமென தாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்- என்றார். (05)

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுகூட்டம்வியாழக்கிழமை ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட





நாடாளுமன்றஉறுப்பினர்கபிலநுவன் அத்துக்கோரள மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோரின் தலைமையில்மாவட்டசெயலகபிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலைமாவட்டஅரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது. கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

கிண்ணியாமற்றும்மூதூர்பிரதேச செயலக பிரிவுகளில் அரசுக்குரிய 300 மீற்றர் அகலமான கடற்கரை வலயத்தில் கனிய மணல் அகழ்வு செய்வதற்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் காணி வழங்க அங்கீகாரம் பெறுதல், நிலாவெளி தொடக்கம் கும்புறுப்பிட்டி கிழக்கு வரையான கடற்கரை 300 மீற்றர் பரப்பளவான அரச காணியை ஜேம்ஸ்குளோபல்தனியார் கம்பனிக்கு நீண்டகால அடிப்படையில் காணி வழங்க அங்கீகாரம் பெறுதல், மாவட்டத்தில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாதார துறை வெற்றிடங்கள், மூதூர் கட்டைபறிச்சான் பாலநிர்மாணம் தொடர்பான விடயம், மக்களின்கோரிக்கைக்குஅமையபுதிய நீர்க்குளாய் இணைப்பு வழங்குவதில் நிலவும் தாமதம் தொடர்பான விடயம், இலக்கம் 115, 22 யுனிற்றில் கிராமசபை கிணறு உள்ள இடத்தில் கந்தளாய் ரஜவௌ முதியோர் சங்கத்துக்கு காணி வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் குச்சவெளி, திரியாய் கிராம பிரிவில் 'மொபைல் பிளான்ற்' நிர்மாணிப்பதற்காக ஓர் ஏக்கர் காணியை இலங்கை கனிய மணல் வழங்குவதற்கு அங்கீகாரம் பெறுதல், பேண்தகுவனமுகாமைத்துவம்ஊடாக காணி பிரச்சினைகளைத் தீர்த்தல், கந்தளாய் வீதியின் இருபுறங்களில் தயிர் வியாபாரத்தில் ஈடுபடுவதனால் நிரந்தரமாக வசிக்கும் மக்களின் காணி உரிமை பிரச்சினை, உப்பாறு, கண்டல்காடு விளைநிலங்களுக்கு ஏற்படும் சேதம், கிண்ணியா பிரதேச சபை பிரதேசத்துக்காக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பிரதேச அலுவலகத்தை பெறுதல் போன்ற பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, கிழக்கு மாகாண அமைச்சுக்களின்செயலாளர்கள்,மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச உயரதிகாரிகள் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(05)

# தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தினுள் சத்தியாகிரக போராட்டமும்: பேரணியும்



(நூருல் ஹுதா உமர்)

கடந்த 57 நாள்களாக இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கலகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றனர். அவர்களது போராட்டம் உக்கிர கட்டத்தை அடைந்துள்ள நிலையில்சுழற்சி முறை உண்ணாவிரத போராட்டம், சத்தியாகிரக போராட்டம் என நாளுக்கு நாள் வீரியம் அடைந்து செல்கின்றன.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 27 ஆம் திகதி ஒருபக்கம் ஊழியர்களின் சத்தியாகிரக





போராட்டம், மறுபுறம் நியாயம் கோரி பேரணி என பல்கலைக்கழக முற்றிலை அதிர வைத்தன.

இங்கு கருத்து தெரிவித்த தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் மற்றும் ஊழியர் சங்கத்தின் செயலாளர் முகமது காமில் ஆகியோர் சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக அரசு எங்களுக்கான நியாயமான கோரிக்கையை பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்தை சுமுக நிலைக்கு கொண்டு வராது நமது நாட்டின் சொத்துக்களான மாணவர்களது கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்றது.

அரசியல்நோக்கங்களுக்காகபலமில்லியன்களை செலவிடும் அரசு, நாட்டின் அபிவிருத்திக்கு துணைநின்று, உதவக்கூடிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும் பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவைகளுக்கு தீர்வை வழங்காது அரச பல்கலைக்கழகங்களை வீழ்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல முயச்சிப்பதாகவும். இங்கு பணிபுரியும் ஊழியர்களின் பின்னாலும் கணிசமான வாக்குகள் இருப்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.(05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com

## இணைய மோசடி தொடர்பில் கவனத்தோடு இருப்போம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் நீர்கொழும்பிலுமாக 137 இந்தியர்களைக் கைது செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் இணையளத் தளங்கள் ஊடாகப் பண மோசடியில் ஈடுபட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதற்கு முன்னர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பலர் இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்காகக் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டும் உள்ளார்கள்.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ''டிஜிட்டல் இலங்கை'' குறித்தும் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்தும் அதிகம் பேசி வரும் நிலையில் டிஜிட்டல் குற்றங்கள் பெருகத் தொடங்கியிருப்பது கரிசனையையும் கவலைகளையும் அதிகப்படுத்துகின்றது. அரசுத் தலைவரின் டிஜிட்டல் எண்ணக்கரு தீவிரமாகச் செயற்படுத்தப்படுவதற்கு முன்னரே டிஜிற்றல் குற்றங்களும் குற்றவாளிகளும் பெருகத் தொடங்கியிருப்பது இந்தத் துறையின் ஆபத்துக்களையும் ஆளும் தரப்பு அது குறித்து இன்னும் அவதானமாகச் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

அதிலும் குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வந்து இத்தகைய இணைய வழி மோசடிகளில் ஈடுபடுமளவிற்கு இலங்கையின் நிலமை பரிதாபகரமாக இருப்பதும் கவனிக்கப்படவேண்டியது. இணையளத் தளக் குற்றங்கள், மோசடிகள் குறித்து மக்களுக்குப் போதிய விழிப்புணர்வின்மையே இதுபோன்ற மோசடிகளுக்குக் காரணமாக இருக்கின்றது. மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, ஆசையைத் தூண்டிவிட்டு அவர்களின் சேமிப்புக்களை, பலசமயங்களில்வாழ்நாள்சேமிப்புக்களை திருடிக்கொண்டோடி விடுகின்றார்கள் இத்தகைய மோசடிப் பேர்வழிகள்.

இவர்கள் ஒரு குழுவாக, அலுவலகம் அமைத்து இந்த மோசடியில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்கின்றன குற்றப்புலான்வுத்துறைச் செய்திகள். இதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட இத்தகைய குற்றவாளிகள் பெரும்பாலும் தனிநபர் நடவடிக்கைகளாகவே செயற்பட்டு வந்துள்ளனர். ஆனால் இப்போது கைது செய்யப்பட்டவர்கள் ஒரு குழுவாக, நிறுவன மயப்பட்ட வகையில் செயற்பட்டு வருகின்றனர் என்பது பேராபத்தை உணர்த்துகின்றது.

அண்மையக் கைதுகளில் இதுவரையில் நீர்கொழும்பில் 55 சந்தேகநபர்களும் கொச்சிக்கடையில் 53 பேரும் மாதிவெலவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 13 சந்தேகநபர்களும் தலங்கமவில் 16 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 158 கையடக்கத் தொலைபேசிகள், 16 மடிக் கணினிகள், 60 கணினிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இவைதான் இந்த மோசடிக்காரர்களின் ஆயுதங்கள்.

உங்களுக்குப் பெரும் அதிர்ஸ்டலாபச் சீட்டு விழுந்துள்ளது, ஆனால் அதனைப் பெறுவதற்கு ஒரு தொகையைச் செலுத்தவேண்டும், அல்லது பிரபல நிறுவனத்தில் பரிசுக் குலுக்கலில் பரிசு விழுந்துள்ளது அதனைப் பெறுவதற்கான கட்டணம் இவ்வளவு செலுத்தவேண்டும் போன்ற வடிவங்களிலோ அல்லது வங்கி கடன் அல்லது காசு அட்டைகளின் விவரங்கள் உள்ளிட்ட தனிநபர் விவரங்களைத் திருடத்தக்க வகையிலான 'ஹக்கிங்' மென்பொருள்களை திருட்டுத்தனமாக கணினியில் தரவிறக்கியோ, அல்லது பாலியல் சபலத்தைத் தூண்டி அந்தரங்கள் விவரங்களையும் படங்களையும் பெற்று அவற்றை வைத்து மிரட்டியோ இத்தகைய இணையக் குற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

இவற்றில் இருந்து பாதுகாக்க மக்கள் விழிப்புணர்வடைவது மிக மிக அவசியம். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். அத்தோடு இணைவழிக் குற்றங்கள் தொடர்பான சட்டங்கள் மேலும் இறுக்கப்பட்டு தண்டனைகள் கடுமையாக்கப்படவேண்டும்.

# கோபம் தவிர்!

**கலாநிதி என். மாதவன்.**

கோபம் வருகிறது என்று சொன்னால் அதன் விளைவுகளை எண்ணிப் பாருங்கள் என்று சொல்கிறார் சீன மேதை கன்பூசியஸ். இரு மனிதர்களுக்கு மத்தியில் ஏற்படும் காரசாரமான விவாதங்கள் அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும் பகைவர்களாகவே வாழும்படியானதாக மாற்றிவிடக் கூடிய வாய்ப்புகள்கூட உள்ளன.



மனவெழுச்சியின் ஒரு வகையாக கோபம் வகைப்படுத்தப்படுகிறது. நகைச்சுவை, அழுகை, இகழ்வுறுதல், வியப்பு, அச்சம், பெருமிதம், வெகுளுதல் (கோபம்), உவகை என்று எட்டு வகையான மெய்ப்பாடுகளாக மனிதர்கள் கொள்ளும் மனவெழுச்சிகளை தொல்காப்பியம் பகிர்கிறது. எட்டு வகை மனவெழுச்சிகளிலும் கோபத்திற்கு இருக்கும் தாக்கம் என்பதே தனி.

ஒருவரின் சினம் என்ற மனவெழுச்சி அவருக்கும் பிறருக்கும் பாதிப்பை அளிக்கக் கூடிய ஒன்று. அதேநேரம் யாருக்கு யார்மேல் கோபம் வருகிறது? யார்யார் மேல் கோபம் கொள்ள இயல்கிறது? எது சரியானது? என்று பார்க்கும்போது வள்ளுவர் துணைக்கு வருகிறார்.

ஒருவர் தம்முடைய கோபம் எங்கு செல்லாது என நினைக்கிறாரோ அந்த இடத்தில் கோபப்படாமல் இருப்பது பெருமை அல்ல.

மாறாக ஒருவருடைய கோபம் எங்கு செல்லுமோ அந்த இடத்தில் கோபப்படாமல் இருப்பதே சிறந்தது என்று வள்ளுவர் வழிகாட்டுகிறார். மேலும், சினத்திலிருந்து தன்னை ஒருவன் காத்துக்கொள்ளாவிட்டால், அது அவனையே அழித்துவிடும் என்று எச்சரிக்கிறார்.

கோபத்தை யாரால் கட்டுப்படுத்த முடிகிறதோ அவரே வாழ்நாளில் எளிதாக வெற்றி பெறுகிறார். ஒருமுறை போர்முனையில் நெப்போலியன் தொடர்



தோல்விகளால் மிகவும் சோர்வாக இருந்தான். அந்த நேரத்தில் ஒரு ஒற்றன் வந்து, 'அரசே நாம் நான்கு திசைகளிலும் பகைவர்களால் சூழப்பட்டு இருக்கிறோம்' என்று கூறுகிறான்.

நியாயமாக அந்த நேரத்தில் நெப்போலியன் கோபப்பட்டுஇருக்கலாம். உடனடியாக சமயோசிதமாக நெப்போலியன், 'நல்லதாகப் போய்விட்டது, நமது வீரர்களை நான்கு திசைகளிலும் சென்று போரிடச் சொல்லலாம்!'' என்று சொன்னானாம். அந்தப் போரில் நெப்போலியன் வெற்றி பெற்றதாக வரலாறு கூறுகிறது.

சோர்ந்தும் தளர்ந்தும் போயிருந்த நெப்போலியன் அந்த நேரத்தில் வேறு மாதிரி எதிர்வினையாற்றி, சினம் கொண்டிருந்தால் இந்த வெற்றி கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே.

உண்மையில் ஒருவர் மற்றொருவர் மேல் சினம் கொள்வதற்கு பல நேரங்களில் புரியாமை ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. யாரால் கோபப்பட இயலுமோ அவர்கள் பெரும்பாலும் உயர் பதவியிலோ வயதில் மூத்தவர்களாகவோ இருந்துவிடுகிறார்கள். இந்த இரண்டு காரணிகளுமே மனஅழுத்தம்கொண்டவர்களாக அவர்களை மாற்றும் தன்மையானவை. ஆனால், மூத்தவர்களாகவும் பதவியில் உயர்வாகவும் இருப்பவர்களில் நல்ல அனுபவங்களோடும் சிறப்பான மனித உறவு நெறிகள் அறிந்தவர்களுமாக இருந்தால் அதனை கையாளும் விதமே தனி சிறப்பானதாக இருக்கும்.

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இயங்குகின்ற இடங்களில் பொதுவாக கோபப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகத்தான் காணப்படுகிறது. எங்கெல்லாம் வார்த்தைகள் மூலமாக புரிதல்களை ஏற்படுத்த வேண்டி இருக்கிறதோ அங்கெல்லாம் வார்த்தைகளின் உபயோகம் கவனத்துடன் அமைய வேண்டும்.

ஒரு மனிதருக்கு கோபம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்காக பின்னணியில் அவருக்கு நாம் சொல்ல வரக் கூடிய விஷயம் புரியாமல் இருக்கலாம் என்று அனுமானத்தில் அணுக முடியும். ஆனால் அதே நேரம் புரிய வைக்கிறேன் என்ற பெயரில் ஒவ்வொன்றுக்கும் குழந்தைக்குச் சொல்வது போல் விளக்கங்கள் அளித்துக்கொண்டிருக்கக் கூடாது. இது மனிதர்களின் சகிப்புத்தன்மையை சோதிப்பதாகவும் அமையலாம். அந்த விதத்தில் நாம் கோபம் என்பது ஒரு தவிர்க்க வேண்டிய மனவெழுச்சி என்ற புரிதலோடு அணுக வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இயல்பாக இருக்கக் கூடிய மனிதர்கள் கோபப்படும்போது அவருடைய நரம்புகள் கூடுதலாக முறுக்கேறி பலவீனமடைகின்றன. அந்த வகையில் உடல்நலன்கருதியும் அனைவரும் கோபப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஒரு விஷயம் புரிகிறது என்று சொன்னால் அதனை புரிந்து கொண்டு செயலாற்றுவதும், அந்த விஷயம் புரியாதபட்சத்தில் அதற்கான புரிதலை கூடுதல் ஆக்கிக் கொள்வதும் கோபத்தை நெருங்கவிடாமல் செய்யும் காரணிகள்.

இதற்கான பொறுப்பை இருதரப்பும் மேற்கொண்டால் புரியாமை என்ற விஷயமே இராது. புரிதலை மேம்படுத்திக் கொண்டு கோபத்தைக் குறைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடவேண்டும். மற்றொரு கோணத்தில் தவறான புரிதலும் கோபத்திற்கான தோற்றுவாயாக அமையலாம்.

அந்த வகையில், ஒருவருக்கு இன்னொருவரைப் பற்றி தவறான புரிதல் இருக்கிறது என்று சொன்னால் அதனை சரியாகப் புரிய வைப்பதற்கான பொறுப்பை இருவரில் ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான முயற்சி இயல்பான சூழலில், இயல்பாக நிகழ வேண்டும். மாறாக, இதில் செயற்கைத் தன்மைகள் புகும்பட்சத்தில் புரியாமை அதிகரிக்கவே செய்யும்.

# 52 நாள்களில் உகந்தையை அடைந்த பாதயாத்திரீகர்கள்

ஞாயிறன்று கானகத்தினுள் பிரவேசிப்பர்





(வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 52 ஆவது நாளில் உகந்தைமலை முருகன் ஆலயத்தை அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் 11 திகதி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினர் கடந்த 52 நாள்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்திற்குள் பிரவேசித்தார்கள்.

உகந்தை மலையில் இருந்தார்கள் ஒய்வெடுக்கும் அடியார்கள்நாளை30ஆம்திகதிகாட்டுப்பாதைதிறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள்.

60 ஆவது நாளில் கதிர்காமத்தை சென்றடைவார்கள். (05)



# மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்





(ஹஸ்பர் ஏ.எச்)

2024 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது காலாண்டு கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் திருகோணமலை மாவட்டஅரசாங்கஅதிபர்சாமிந்தஹெட்டியாரச்சிதலைமையில் மாவட்டசெயலகஉபஒன்றுகூடல்மண்டபத்தில்நடைபெற்றது.



இதன்போது கணக்காய்வு அத்தியட்சகர் எஸ்.எச்.எம்.மர்சூக், பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஃறூப், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள்,மாவட்டசெயலகபதவிநிலைஉத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக கணக்காளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வு கிளை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தாந்தாமலை சிறீ முருகன் ஆலய மகோற்சவம்





(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ கொடியேற்றம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன் றீஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலயத்தின் பிரதம குருவுமான மு.கு.சச்சிதானந் தமூர்த்தி குருக்கள் தலைமையிலே திருவிழா பூசை வழிபாடுகள் நடை பெறவுள்ளது.

கொடியேற்றம் ஆலய பரிபாலன சபை தலைவர் மு.அருணன் தலைமையிலே நடைபெற்று தொடர்ந்து 21 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று இறுதியாக ஜீலை 22 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

உற்சவகாலங்களில்கதாப்பிரசங்கம் கூட்டுவழிபாடுமற்றும்கலைநிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

மேலும் பக்த அடியார்களுக்கு விசேட பஸ் போக்குவரத்து சேவைகள் தினமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தினமும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை செயலாளர் செ. பரா( அதிபர்) தெரிவித்தார். (05)



# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நுழைவாயில் அமைக்க அடிக்கல் நடப்பட்டது



(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பிரதான நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று (வெள்ளிக்கிழமை) கல்லூரிவளாகத்தில்இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நுழைவாயிலுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.



நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 50 லட்சம் நிதி மூலம் இந்நுழைவாயில் துரித கதியிலும் நவீன முறையிலும் நிர்மாணிக்கப்படுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் பன்முகப்படுத்தப்பட்ட 15 லட்சம்ரூபாநிதிஒதுக்கீட்டின்மூலம்இப்பாடசாலையின் பேண்ட் வாத்திய குழுவிற்கான மேலங்கிகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதுதவிர, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் முயற்சியின் பயனாக இப்பாடசாலையின் 450 மீற்றர் கொண்ட உள்ளக வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் காபட் இட்டு செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளும் இதன்போதுமேற்கொள்ளப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.செய்னுடீன் உள்ளிட்ட துறை சார் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (05)



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## வங்குரோத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பட்டுள்ளதா என்பதையே அவை அறிவிக்கும் என்று எதிர்க் கட்சிகளுக்குப்பதில்தெரிவித்துள்ளார் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி.

இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். கொழும்பில் ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போ-து அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2022 ஏப்ரல் 12 எம்மால் சர்வதேச கடனில் ஒரு தொகையை மீள செலுத்த முடியாது என்று அறிவித்தோம். இலங்கை ஆளும் தரப்பே இதனை அறிவித்தது. மாறாக வெளிநாட்டு நிதித் தரப்படுத்தல் நிறுவனங்கள் அல்ல. அதேபோன்று இலங்கை அந்த நிலைமையிலிருந்து மீண்டுள்ளதா இல்லையா என்பதையும் நாமே அறிவிப்போம். சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனங்கள் இலங்கையின் கடன் மீள்செலுத்தல் திறன் எந்த மட்டத்தில் உள்ளது என்பதையே வெளிப்படுத்தும்.

மக்கள் மத்தியில் போலியான கருத்துக்களைப் பரப்பும் எதிர்க்கட்சிகள் இதனைப் புரிந்துகொண்டு, அதன் பின்னர் விமர்சனங்களை முன்வைக்கவேண்டும். இருதரப்பு கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதால் எமக்கு 17 பில்லியன் டொலர் இலாபம் கிடைத்துள்ளது. இது எமது பொருளாதாரத்திற்கு பெரும் பலம் சேர்த்துள்ளது.

எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு ஜூலை 2 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது மாத்திரமின்றி ஜூலை 2, 3 ஆகிய இரு தினங்களும் அது தொடர்பில் விவாதத்தை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விவாதத்தின்போது ஆளும் தரப்பால் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் முழுமையான விளக்கம் வழங்கப்படும். அப்போது எதிர்க்கட்சிகளால் கூறப்படும் பொய்கள் அனைத்தும் அம்பலமாகும்.

கடன்மறுசீரமைப்புத்தொடர்பில் ஏற்கனவே எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள், சர்வதேச பிணைமுறிகள் தொடர்பான பேச்சு வெற்றியடைவதற்கு உதவும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் கடனை மறுசீரமைக்குமாறு எமக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்காக லாசார்ட் நிறுவனத்தை எமது பிரதிநிதியாக நியமித்தோம். சட்ட விடயங்களுக்காககிளிபர்ட்ஹான்ஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டது. நாம் முதலில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தோம். கடன் மறுசீரமைப்பை முன்னெடுத்தபோதும்ஒருபக்கத்தில் சில கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஒரு நாடாகவும் நாம் செயற்பட்டு வந்தோம்.

இதுவரை இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இருதரப்பு கடன் முகாமைத்துவத்திற்கான உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை உருவாக்கி அதற்காகச் செயற்பட்டன. அதேசமயம் சீனாவுடனும் பேச்சு நடத்தினோம். இவைஅனைத்தினதும்முடிவில்,நாம் வெற்றி பெற்றுள்ளதுடன், கடனை திருப்பிச் செலுத்தும் நிலைபேறான நாடாக மாறியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுமையான கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்பதையும் கூற வேண்டும். மொத்தக் கடன் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில்95%வரைகுறைக்கவேண்டும். மேலும், வெளிநாட்டுக் கடனுக்கான தற்போதைய வட்டியை மொத்த தேசிய உற்பத்தியில் 4.5% வரை குறைக்க வேண்டும் என்றார் அமைச்சர்.

## ரணிலால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல்கொட்டாவருக்மலேஸ்ரீதர்ம விஜயாலோக மகா விகாரையின் தலைமை மகாநாயாக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டதன் பின்னர் நிகழ்த்தப்பட்ட விசேட அனுசாசனத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை தற்போது அடைந்து வரும் பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றம் குறித்து தேரருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடு மீண்டும் இவ்வாறானதொரு பாதாளத்தில் வீழ்ந்துவிடாமல் இருக்க நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் அதற்காக எதிர்வரும் வருடங்களில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனவும் குறிப்பிட்டார்.

நாடு பேரழிவை எதிர்கொள்ளவிருந்த வேளையில் ஜனாதிபதிப் பதவியை ஏற்குமாறு வண.இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் விடுத்த அழைப்பை இதன்போது நன்றியுடன் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, குறுகிய காலத்திற்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு அன்று தான் தீர்மானித்ததாகவும், நாட்டுக்காக முன்வர விருப்பம் தெரிவித்த அனைவரினதும் ஆதரவைப் பெற்று மிகக் குறுகிய காலத்தில்நாட்டின்பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்நோக்கிய உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது இலங்கைக்குக் கிடைத்த தனித்துவமான வெற்றியாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக நாட்டின் அனைத்துப்பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, தொழிற்சங்க நடவடிக்கைகள்நிறுத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பால் புரைக்கேறியதால் ஒருமாத குழந்தை சாவு

### யாழ். இணுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், இணுவில் கிழக்கு பகுதியில் பால் புரைக்கேறியதில் பிறந்து நாற்பது நாள்களேயான பெண் குழந்தை ஒன்று புதன்கிழமை உயிரிழந்துள்ளது.

புதன்கிழமை அதிகாலை குழந்தை அசைவற்றுக் கிடப்பதை அவதானித்த பெற்றோர் குழந்தையை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குஎடுத்துச் சென்றுள்ளனர்.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பிலான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் பால் புரைக்கேறியமையாலேயேமரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.(05)






# வீரமுனை வரவேற்பு கோபுரம் அமைப்பதற்கான தடையுத்தரவு வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேசத்தில் சட்டரீதியாக அனுமதி பெறாமல் வீரமுனை வரவேற்புக் கோபுரம் எனும் பெயரில் கோபுரம் ஒன்று அமைப்பதற்கு எதிராக இரண்டு நபர்களால் முறைப்பாடு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நௌபர் என்பவரால் மன்றிக்கு செய்யப்பட்ட அறிக்கையின் பிரகாரம் சனிக்கிழமை (15) சம்மாந்துறை பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்டதும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் உட்பட்ட சம்மாந்துறை ஆண்டியடி சந்தி எனும் இடத்தில் வீரமுனைக்கு செல்லும் வீதியில் வீரமுனை பிரதேசவாசிகளால் வரவேற்பு கோபுரம் ஒன்று அமைப்பதற்க்கு அடிக்கல் நாட்டு விழாவினை நடாத்துவதால் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில்இனக்கலவரம்ஒன்றுஏற்படுவதற்கு சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் பாதுகாப்பிற்க்கு அச்சுறுத்தல் மற்றும் சமாதானகுலைவு ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதாலும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட கூடிய சாத்தியமுள்ளதாலும் இவ் நிகழ்வை நடாத்துவது உசிதமானது அல்ல என்பதனால் இந்த நிகழ்வினை நடத்தாமல் நிறுத்துமாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன், வீரமுனை கோவில் தலைவர் ராஜ கோபால் , கிராம உத்தியோகத்தர் பிரதீபன் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் கோபுரம் அமைப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கடந்த 19 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸாரால் மன்றிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த அறிக்கை தொடர்பான விசாரணையை மேற்கொண்ட போது 27 வரை தொடர்ந்து இடைக்கால தடையுத்தரவு நீடித்து சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக 27 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது இதில் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு நீக்கப்பட்டது.

எனினும் சம்மாந்துறை பிரதேச சபையால் மீண்டும் வியாழக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது இவ் வழக்கு எதிர்வரும் 05 ஆம் திகதி வரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(05)

# உணவுத்தன்னாதிக்கம், சுற்றாடல் தொடர்பான கலந்துரையாடல

## தில்லையூர் மீனவக் கிராமத்தில் நடந்தது



(எம் சியாஜ்)

கற்பிட்டி புதுக்குடியிருப்பு தில்லையூர் மீனவகிராமத்தில் உணவுதன்னாதிக்கம் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மீனவக் குழுத் தலைவர் அன்வர்தீன் தலைமையில் தில்லையூர் மீனவ சங்கக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் சிவில் சமூக ஒன்றியத்தின் அரசியல் கட்சி பிரமுகர்கள் உடனான கலந்துரையாடலில் கலந்து கொண்ட தில்லையூர் மீனவ சங்கத்தின் தலைவர் சுபுறுல்லாஹ் மீனவ தொழிற்சங்கத்தின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால செயற்பாடுகள் பற்றிய விளக்கங்களை தில்லையூர் மீனவர்களுக்கு வழங்கியதுடன்

உணவு தன்னாதிக்கம் மற்றும் சுற்றாடல் பிரச்சினை தொடர்பான தரவுகளையும் இன்றைய நிலை பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய உரை ஒன்றை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் புத்தளம் மாவட்ட இணைப்பாளர் ஜே. பத்மநாதன் நிகழ்த்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் தீர்வாக உணவு தன்னாதிக்கத் திட்டமாக கற்பிட்டி தில்லையூர் கிராமத்தில் இயற்கையாக வளரக் கூடிய முருங்கை மரம் பற்றி கவனம் செலுத்தப்பட்டதுடன் இதற்கான கேள்வி, சந்தை வாய்ப்புக்கள் என்பன அதிக மாக காணப்படுகிறது எனவே 'ஒருவர் ஒரு மரம்' நடும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# நிந்தவூர் பிரதேச பள்ளிவாசல்களுக்கு சோலார் பவர் சிஸ்டம் உருவாக்கம்

## பைசால் காசிம் நிதி ஒதுக்கீடு



(கே எ ஹமீட்)

நிந்தவூர் பிரதேச பள்ளிவாசல்களுக்கு சோலார் - சூரிய படல மின் உற்பத்தி கட்டமைப்பு வழங்கும் செயற்திட்டத்திற்கு திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி.பைசால் காசிம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மின்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் நெருக்கடிக்குள்ளான பள்ளிவாசல்களுக்கு சோலர் பேனல் அமைப்புக்களை பொருத்துவதன் மூலம் நிவாரணம் அளிப்பதற்கான செயற்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த செயற்திட்டத்தின் மூலம் பயனடையவுள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகத்தினர்களுடனான கலந்துரையாடல் மற்றும் ஆவணங்கள் கையளிப்பு நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினரின் பங்குபற்றுதலுடன் வியாழக்கிழமை நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.



இதன் போது சோலார் மின் உற்பத்தி தொடர்பான தெளிவுகள் மற்றும் ஆலோசனைகள் துறை சார் வல்லுநர்களால் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் பள்ளிவாசல் நிர்வாகத்தினர்களுக்கான ஆவணங்களும் வழங்கிவைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ எம் அப்துல் லத்தீப், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ சுல்பிகார், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் அஸ்லம் ஆகியோரும் கலந்துகொண்டனர்;.(05)

# பலஸ்தீன மக்களுக்கான துவாப் பிரார்த்தனைகள்



(ஹஸ்பர் ஏ.எச்)

பலஸ்தீன மக்களுக்கான துவா பிரார்த்தனையும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி காலம் சென்ற ஷஹீத் இப்ராஹிம் ரயீஸி அவர்களுக்கான கத்தமுல் குர்ஆனும் நினைவுப் பேருரையும் என்ற தலைப்பின் கீழ் வியாழக்கிழமை மாலை கிண்ணியா விஷன் மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.



கிண்ணியா மனித நேயத்துக்கான சமூக ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் அதன் தலைவர் முஹம்மது சகித் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் உலமாக்கள் பள்ளிவாசல் சம்மேலணங்களின் தலைவர், ஓய்வு பெற்ற ஊழியர்களின் சங்கத்தலைவர்கள் அதன் உறுப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளர் சந்திப்பும் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் சட்டத்தரணி மர்சூம் மௌலான ( விசேட பேச்சாளர்) பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

இன்று பலஸ்தீனத்தை பற்றி பல்வேறு நாடுகளிலும் பேசப்பட்டு வருகின்றது

ஈரான் ஜனாதிபதி காலம் சென்ற இப்ராஹிம் ரைஸி பற்றியும் அவர் இலங்கையுடன் கொண்ட தொடர்பு பற்றியும் தமிழ் சிங்கள முஸ்லிம் இந்து கிறிஸ்தவ மக்கள் அவருக்கு செய்கின்ற தன்சல் நிகழ்வுகளை பார்க்கின்ற போது. இன்னும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதை பறைசாற்றி நிற்கின்றது. - என்றார். (05)

## யாழில் எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு



யாழ்ப்பாணத்தில்வெற்றுக்காணி ஒன்றில் இருந்து வியாழக்கிழமை முற்றாகஎரிந்தநிலையில்மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

உடுவில் தெற்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக எரிந்த நிலையில் காணப்படுவதாக, சுன்னாகபொலிஸாருக்குகிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கதகடுஎனநம்பப்படும்இலக்க தகடு ஒன்று காணியின் பிறிதொரு இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இலக்கதகட்டின்அடிப்படையில், உரிமையாளரைகண்டறிவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை கடந்த வாரம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டபகுதியில்நள்ளிரவுவேளை வீதியில்வைத்துசுமார்10லட்சம்ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டு கொளுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## கிளிநொச்சியில் நாய்கடிக்கு இலக்கான சிறுமி உயிரிழப்பு

கிளிநொச்சி, குமாரசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த நான்கு வயது சிறுமி ஒருவர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி சிகிச்சை பலனின்றி புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

சிறுமி விசர்நாய்க் கடிக்கு இலக்கானநிலையில்யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில்கடந்த ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)

## பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்கள் வீடு திரும்பினர்



கொழும்பில்முன்னெடுக்கப்பட்ட ஆசிரியர் போராட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதற்கு எதிர்ப்புதெரிவித்துவியாழக்கிழமை அதிபர், ஆசிரியர் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் பாடசாலைகளுக்கு குறைந்தஅளவிலானமாணவர்களே வருகைதந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

குறிப்பாக வவுனியாவில் அனைத்து பாடசாலைகளிலும் குறைந்த அளவான மாணவர்களே சென்ற நிலையில் ஒரு சில ஆசிரியர்களும்பாடசாலைகளுக்கு பிரசன்னமாகி இருந்தனர்.

எனினும், பெற்றோர் தாம் அழைத்து வந்த பிள்ளைகளை மீண்டும் வீடுகளுக்கு அழைத்துச் சென்றதையும் சில மாணவர் கள்பாடசாலைவாயிலில்காத்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.(05)



# நுவரெலியா சிங்கள பாடசாலைக்கு உள்ளக பாதை அடிக்கல் நாட்டும் விழா

(எம் சியாஜ்)

நுவரெலியா இலந்தையடி சிங்கள மகா வித்தியாலயத்திற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மற்றும் உள்ளக பாதைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் டப்யூ.கே.எல்.எஸ் தமேல் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் மற்றும் விசேட அதிதிகளாக நுவரெலியா அமைப்பாளர் ஹஸீப் நிஜாம், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்ஷி ஜமால்தீன், இணைப்புச் செயலாளர் எச் அமீர் அலி ஆசிரியர், ஊடக செயலாளர் எம் எம் நௌஃபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம்;

புத்தளம் தொகுதிக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கடந்த காலங்களில் இல்லாததால் ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பாகவும், விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் மாவட்டத்திற்கு உள்ளேயே பிரிவினைகள் ஏற்பட்டது தொடர்பாகவும் அரசியல்வாதிகள் தமது சொந்த இலாபங்களுக்காக மக்களை பயன்படுத்துவது தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும், பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியன இணைந்து இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# தமது உரிமைகளை வலியுறுத்தி பால் புதுமையினர் நடைபவனி

## வவுனியாவில் நடந்தது



பால்புதுமையினர் தங்களது உரிமைகளை வலியுறுத்தி, தங்களையும் சக மனிதர்களாக எண்ண வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து புதன்கிழமை வவுனியாவில் நடைபவனியொன்றை முன்னெடுத்தனர்.

இந்த நடைபவனி வவுனியா புதிய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகி, நகர் வழியாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை சென்றடைந்ததோடு நிறைவு பெற்றது.

'யாழ். சங்கம்' என்ற பால்புதுமையினத்தவர்களுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நடைபவனியில் சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.

இந்த நடைபவனியில் தமது உரிமைகளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தாமும் உணர்வுகள் கொண்ட மனிதப் பிறப்புக்களே என்பது போன்ற கருத்துக்கள் பால்புதுமையினர் இதன்போது முன்வைத்திருந்தனர். (05)

# திருமலையில் மதிலை உடைத்து வீட்டுக்குள் சென்றது எரிபொருள் கொள்கலன் வாகனம்

## இருவர் காயம்





திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் 98 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது . கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த எரிபொருள் கொள்வனவு வாகனமே இவ்வாறு வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றுள்ளது.

நித்திரை கலக்கம் காரணமாக இவ்விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது. இதில் எரிபொருள் கொள்கலனைச் செலுத்திய சாரதி வயது (50), உதவியாளர் வயது (45) ஆகிய இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் மதுகம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# தாய் மற்றும் மகளை கத்தியால் குத்திவிட்டு 'ஹபாயா' அணிந்துதப்ப முயன்றவர் கைது

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் தாய் மற்றும் மகளை கத்தியால் தாக்கிவிட்டு, பெண் வேடமிட்டு தப்பிக்க முயன்ற நபரை கைது செய்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூரை பிறப்பிடமாகவும் ஈச்சநகர் பகுதியில் திருமணம் முடித்து வசித்து வரும் 38 வயதுடைய குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த தாய் (வயது 54) மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலும் மகள் (வயது 31) கந்தளாய் தள வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கத்திக்குத்துக்குள்ளான தாயிடம் கத்திக்குத்தை மேற்கொண்ட நபர் கடனுக்கு பணம் வாங்கியுள்ளார்.

இந்நிலையில் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்காக தாக்குதல் தாரியின் கையடக்க தொலைபேசி திருத்தும் கடைக்கு கத்திக்குள்ளான தாய் சென்று கேட்டுள்ளார்.

அதன் பின்னரே சந்தேக நபர் அத்தாயின் வீட்டுக்குச் சென்று கத்திக் குத்து தாக்குதலை நடத்தியுள்ளார்.

தாக்கிய நபர், அங்கிருந்த தப்பிச் செல்வதற்காக முகத்தை மூடி ஹபாயா அணிந்து வெளியே செல்ல முயற்சித்த வேளையிலேயே, சம்பவ இடத்துக்கு விரைந்த தம்பலகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தம்பலகாமம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# இலஞ்ச ஆணைக்குழுவினால் கிராம அலுவலர் ஒருவர் கைது

பெண் ஒருவரிடம் 25 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில் ஹீரஸ்ஸகல கிராம அலுவலர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு புதன்கிழமை கைது செய்துள்ளது.

ஹீரஸ்ஸகல கிராம சேவை பிரிவில் வசிக்கும் பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு ஹிரஸ்ஸகல பிரதேசத்திற்குச் சென்று குறித்த கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் பணம் கொடுத்த போது அவரை கைது செய்துள்ளனர். முறைப்பாடு செய்த பெண்ணின் மகனின் வீட்டிற்கு மின்சாரம் வழங்கிய சம்பவம் தொடர்பில் கிராம அதிகாரி இந்தப் பணத்தை எடுத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.(05)

# வவுனியாப் பல்கலை கல்வி சாரா ஊழியர்கள் கவனவீர்ப்பு ஊர்வலம்




வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் வியாழக்கிழமை கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கைபூராகவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 57 ஆவது நாளாகவும் தமது பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு சத்யாக்கிரக போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.




இந்நிலையில், புதன்கிழமை கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர், அதிபர்களது மீது தண்ணீர் தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும் தமது நியாயமான கோரிக்கையாக காணப்படுகின்ற சம்பள உயர்வை உடனடியாக தர வேண்டும் எனக் கூறியும் வியாழக்கிழமை ஊர்வலத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் பீட கட்டட தொகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலமானது நகர் வழியாக பழைய பஸ் நிலையத்தை சென்றடைந்து நிறைவடைந்திருந்தது. (05)

# வீடு புகுந்து வயோதிபத் தம்பதியரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய கும்பல்

## மனைவி உயிரிழப்பு : கணவர் படுகாயம்

வீட்டினுள் கொள்ளையடிக்க நுழைந்த கும்பலொன்று அவ்வீட்டில் வசித்துவந்த வயோதிப தம்பதியரை கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் 74 வயதுடைய வயோதிபப் பெண் உயிரிழந்ததோடு, பெண்ணின் கணவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எஹலியகொடை, அராபொல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அந்த வீட்டில் வயோதிப கணவரும் (வயது 76) மனைவியும் மட்டுமே வசித்துவருகின்றனர். அவர்களது இரு பிள்ளைகள் வெளிநாட்டிலும், ஒரு மகள் களனி பிரதேசத்திலும் தனித்தனியே வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், வீட்டுக்குள் நுழைந்த கும்பல், வயதான மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்ததோடு, வீட்டின் குளியலறைக்கு அருகில் கணவரையும் தாக்கி, கை, கால்களை கட்டியதாகவும், இத்தாக்குதலில் கணவரும் இறந்துவிட்டார் எனக் கருதிய பின்னர் கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்காகவே வீடு புகுந்து இந்த கும்பல் தம்பதியரை தாக்கிக் கொலை செய்திருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த தாக்குதலில் எஹலியகொடை அராபொல நதுரன பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே கொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்து எஹலியகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள பெண்ணின் கணவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஆவார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் எஹலியகொடை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2024இல் வெளியிடப்பெற்றது